விலை ரூபா 6.00

# ஈழநாதம்

EELANATHAM — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | மாசி - 25 | 09-03-2003 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 19



தரமான முறையில் படப்பிடிப்புக்களுக்கு நாடவேண்டிய இடம்

தாசன் போட்டோ அன் வீடியோ

பிரதான வீதி,
இராமநாதபுரம், கிளிநொச்சி


# சமாதான முயற்சிகளுக்கு முழுப்பங்களிப்பை விடுதலைப் புலிகள் வழங்கி வருகின்றனர்!

## நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம்

**தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிகளில் முழுமையான பங்களிப்பினை வழங்கி வருவதாக நோர்வே சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார். கனடாவிலிருந்து ஒலிபரப்பாகும் ஊடகமொன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.**

தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானப் பாதையில் முன்னேறி இறுதித் தீர்வினை அடைவார்கள் என நான் நம்புகின்றேன். சிறிலங்கா பிரதமர் ரனில் விக்கிரமசிங்கவும் பிரச்சினைக்கு சமாதான வழி மூலம் இறுதித் தீர்வைக்காண முடியுமென உறுதியாக நம்புகின்றார். போர் எந்தப் பிரச்சினைக்கும் ஒரு தீர்வினைத் தராது என்பதை அனுபவ ரீதியாக அறிந்துள்ளோம். பேச்சுக்கள் மூலமாகவே இலங்கை இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண வேண்டும் என இரு தரப்பினரும் விரும்புகின்றனர்.



சிறிலங்கா அரசு உலக நாடுகள் பலவற்றிற்குச் சென்று சமாதான முயற்சிகளுக்கு ஆதரவைத் திரட்டி

(08 ஆம் பக்கம் பார்க்க)

## வவு. மாவட்ட 'சிரான்' உபகுழு அரச செயலகத்தில் கூடியது

(வவுனியா)

வவுனியா மாவட்ட 'சிரான்' உபகுழுவின் கூட்டம் நேற்று வவுனியா மாவட்ட அரச செயலகத்தில் இடம்பெற்றது.

இதில் விடுதலைப் புலிகளின் தரப்பில் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன், வவுனியா மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் அலை, வவுனியா மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் சுவர்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அரச தரப்புப் பிரதிநிதிகளாக வவுனியா மாவட்ட அரச அதிபரும், வவுனியா சிங்களப் பிரதேச, பிரதேச செயலர் திலகரட்ணவும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் மீள்குடியமர்வு, சுகாதாரம், நீர்ப்பாசனம், வீதி, கல்வி ஆகியவற்றில் பிரச்சினைகள் இனங்காணப்பட்டு அவை முன்னுரிமைப்படுத்தி கிளிநொச்சி 'சிரான்' செயலகத்துக்கு அனுப்பி

(08 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் மீள்குடியேற்றம் நேற்றைய சந்திப்பில் இணக்கம்!

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் மீள் குடியேற்றத்திற்கான இணக்கம் நேற்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான கூட்டம் அரச செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

இதில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு பிரதேச செயலர்களும், வவுனியா மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் எழிலன், வன்னி இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவும், நான்கு பிராந்திய இராணுவத் தளபதிகளும் கலந்து கொண்டனர்.

ஏற்கனவே தாண்டிக்குளம் தொடக்கம் ஓமந்தை வரையிலான இனங்காணப்பட்ட பகுதிகளில் தாண்டிக்குளம், நெல்வேலி,

(08 ஆம் பக்கம் பார்க்க)

## 'உப்பில் உறைந்த உதிரங்கள்' ஒளிநாடா நேற்று வெளியீடு

(வவுனியா)

உலக பெண்கள் தினத்தை முன்னிட்டு கடற்புலிகளின் ஆதரவுடன், நிதர்சனம் மகளிர் திரைப்பட உருவாக்கல் பிரிவு வெளியிடும் 'உப்பில் உறைந்த உதிரங்கள்' குறுந்திரைப்பட வெளியீட்டு விழா பல பகுதிகளிலும் நடைபெற்றது.

நேற்றுமாலை 5.00 மணிக்கு வவுனியாவில் முத்தையா மண்டபத்தில் நடைபெற்ற வெளியீட்டுநிகழ்வுக்கு வவுனியா மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் அலை தலைமைதாங்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதிகள் 30 பேரின் நிலைமை கவலைக்கிடம்

(களுத்துறை)

களுத்துறைச் சிறைச்சாலையில் நேற்று 9ஆவது நாளாக தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டுவரும் கைதிகளில் 30 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

தம்மை விடுதலை செய்யக் கோரியே இந்த சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர். கைதிகளில் 61 பேர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் 30 பேரின் நிலையே கவலைக்கிடமாக உள்ளது. 15 க்கு மேற்பட்டோர் இரத்த வாந்தி எடுத்துள்ளனர்.

சிறிலங்கா சமாதானச் செயலகச் செயலர் பேணாட் குணதிலக மற்றும் மன்னார் ஆயர் ஆகியோர் இவர்களை சென்று

(08 ஆம் பக்கம் பார்க்க)

## கோரதீவு - சங்குப்பிட்டிப் பாதையை திறக்கக்கோரி கிளி. அரச அதிபருக்கு மகஜர்

### கிளி. செஞ்சிலுவைச் சங்கம் சமர்ப்பிப்பு

கோரதீவு - சங்குப்பிட்டிப் பாதையைத் திறக்கக் கோரி இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி மாவட்டக் கிளை, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபருக்கு மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது.

அந்த மகஜரில், 1990இல் தடைப்பட்டுப்போன யாழ். குடாநாட்டுக்கான தரைவழிப் பாதை ஏ-9 வீதி மீண்டும் சமாதான சகவாழ்வின் ஆரம்பமாக 08.04.2002 இல் திறக்கப்பட்டு, மக்கள் மகிழ்வுடன் அன்றாடம் பயன்படுத்தி வருகின்றனர். ஆயினும், 1991இல் போர் காரணமாக தடைப்பட்டுப் போன யாழ். குடாநாட்டுக்கான இன்னுமொரு

(08 ஆம் பக்கம் பார்க்க)

## அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு வடக்கு — கிழக்கில் பேரணிகள், கூட்டங்கள்!

அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு வடக்கு - கிழக்குப் பகுதிகளில் நேற்று பேரணிகளும், பொதுக் கூட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட சமூக பெண்கள் மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் கோட்டை முனையில் உள்ள உன்னூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்தின் முன்பாக இருந்தும் தாண்டவன்வெளி தேவாலய வளாகத்தின் முன்பிலிருந்தும் முற்பகல் 10.00 மணிக்கு புறப்பட்ட பேரணிகள் இந்துக் கல்லூரி மைதானத்தை வந்தடைந்தது. இப்பேரணியில் போரினால் பாதிக்கப்பட்ட விதவைகள், பெண்கள், பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் மட்டக்களப்பு தேசிய கல்லூரி மாணவிகள் உட்பட பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

இப்பேரணியினால் மட்டக்களப்பு - திருமலை வீதியில் சில மணி நேரம் போக்குவரத்துக்களும் நிறுத்தப்பட்டிருந்தன.

தொடர்ந்து இந்துக் கல்லூரி மைதானத்தில் பொதுக்கூட்டம் இடம்பெற்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் அனைத்து பிரதேசங்களையும் சேர்ந்த பெண்கள் பிரதி நிதிகளின் ஒன்றுகூடல் நல்லூர் இந்து இளைஞர் மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

யாழ் மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் கலைவிழி தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## விடுமுறை தினங்கள் மாற்றம்

இவ்வாண்டு பாடசாலை விடுமுறை தினங்களை மீளாய்வு செய்ய கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. இதற்கமைய இவ்வருட முதலாவது தவணை அடுத்த மாதம் 4 ஆம் திகதி முடிவடையும், இரண்டாவது தவணை மே மாதம் 5 ஆம் திகதி ஆரம்பமாகும். ஆகஸ்ட் மாதம் 6ஆம் திகதி இரண்டாம் தவணை முடிவடையவுள்ளது. மூன்றாம் தவணை ஆகஸ்ட் மாதம் 25ஆம் திகதி ஆரம்பித்து நவம்பர் மாதம் 28 ஆம் திகதி முடிவடையும்.

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

எனது மோட்டார் சைக்கிளின் பின்பக்க (மஞ்சள் நிற) NPGG 9955 இலக்கத்தகடு A-9 வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கிளிநொச்சி மக்கள் வங்கி முகாமையாளரிடம் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். மு.சிவநேசன், மக்கள் வங்கி, வவுனியா. (2999)

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள PENT IUAM - 4 Computer, Pana Sonic V.CD/A.C.D Playar உண்டு. தொடர்புகட்கு: தங்கமாளிகை, யாழ் சாலை, கிளிநொச்சி. (3007)

# வதிவிட வேளாண்மையில் பரிசில் பெற்றோர் விபரம்

வதிவிட வேளாண்மை மற்றும் சிறந்த நெற்செய்கையில் தெரிவு செய்யப்பெற்று பரிசில்கள் பெற்றவர்களின் பெயர் விபரம் பின்வருமாறு.

- வதிவிட வேளாண்மை

முழங்காவில் பிரதேசம்

தி. தர்மகுலசிங்கம், கு. கதிரவேற்பிள்ளை, இ. கணபதிப்பிள்ளை.

பூநகரிப் பிரதேசம்

ர.பிரேமலதா, க. பத்மநாதன், பொ. நற்குணநாதன்.

- நீர்பாசன மூலம் சிறந்த நெற்செய்கை.

வட்டக்கச்சிப் பிரதேசம்

க. தங்கராசா, செ. தவராசா, மு. நாகராசா

அக்கராயன் பிரதேசம்

மா. உதயகுமார், அ.பாலகிருஸ்ணன், ச. சசிகரன்

கிளி.நகர் பிரதேசம்

அ. அமிர்தலிங்கம், பா. தங்கவேலு, சி. பரமானந்தன்.

கண்டாவளைப் பிரதேசம்

பொ. யோகலிங்கம், மு. விக்கினேஸ்வரன், ந. யோகநாதன்

முழங்காவில் பிரதேசம்

த. இராசேந்திரம், க. தனபாலசிங்கம், க. தர்மராஜா.

- மானாவாரி மூலம் சிறந்த நெற்செய்கை

வட்டக்கச்சிப் பிரதேசம்

வே. செல்வவிநாயகமூர்த்தி

அக்கராயன் பிரதேசம்

சு. பாலையா, சி. பாலசிங்கம், அ. துரைசிங்கம்

கிளி. நகர் பிரதேசம்

சி. தர்மராசா, த. சிவகுமார், க. லகுநேசன்

முழங்காவில் பிரதேசம்

அ. குகதாசன், சு. தாமோதரம்பிள்ளை, போ. சிற்சபேசன்.

பூநகரிப் பிரதேசம்

அ. தனபாலசிங்கம், தா. பாலசிங்கம், ப. தெட்சணாமூர்த்தி.(சோ)

## கூட்டம்

கிளி. மாவட்ட அத்தியாவசிய சேவைகள் குழுக் கூட்டம் எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணிக்கும், மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம் பிற்பகல் 2.00 மணிக்கும் நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிளி. அரச அதிபர் கேட்டுள்ளார்.

### த.பு. கழகம் நடாத்தும்

# இலவசக் கணனிப் பயிற்சி 2 ஆம் கட்டம் ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

கனேடிய தமிழர் புனர்வாழ்வுக் கழக ஆதரவுடன் தாயகத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடாத்தும் இலவசக் கணனி பயிற்சி நெறியின் 2ம் கட்ட பயிற்சி வகுப்புக்கள் கடந்த திங்கட் கிழமை ஆரம்பமாகின.

கிளிநொச்சியிலுள்ள கணனிப் பயிற்சி மண்டபத்தில் நடைபெற்ற இன் நிகழ்வில் த.பு.கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி. இராசநாயகம், டென்மார்க் த.பு.கழகத்தைச் சேர்ந்த ஆனந்தராஜா உட்பட முக்கிய பிரமுகர்கள் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு கணனி பயிற்சி நெறியை ஆரம்பித்து வைத்தனர்.

இதேவேளை முதற்கட்டப் பயிற்சிநெறியில் தோற்றி சித்தியெய்திய மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு விரைவில் நடைபெறவிருப்பதாக புனர்வாழ்வுக் கழக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

வறிய மாணவர்களின் நன்மை கருதி அவர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் த.பு.கழகத்தால் நடாத்தப்பெறும் இப் பயிற்சி நெறி மட்டக்களப்பு. திருகோணமலை, மன்னார் மாவட்டங்களிலும் நடாத்தப் பெற்று வருவதுடன். வெகு விரைவில் அம்பாறை மாவட்டத்திலும் இலவசக் கணனிப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (சோ)

## கலந்துரையாடல்

பூநகரி பிரதேசத்தில் மீள் குடியேறிக் கொண்டிருக்கும் கறுக்காய்த்தீவு, செட்டியகுறிச்சி கிராம மக்களிற்கான மிகவும் அவசரமானதும், அவசியமானதுமான கலந்துரையாடல் நாளை திங்கள் நண்பகல் 12.00 மணிக்கு கறுக்காய்த்தீவு கந்தசுவாமி ஆலய முன்றலில் நடைபெறவுள்ளதால் கறுக்காய்த்தீவு, செட்டியகுறிச்சி கிராம மக்களை கலந்து கொள்ளுமாறு பூநகரி பிரதேச அரசியல் துறையினர் கேட்டுக்கொள்கின்றனர்.

உ
சிவமயம்

### கரைச்சி
### புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல் தினத்தில் வியாபாரம் மேற்கொள்ளும் வணிகர்களுக்கான
## அறிவித்தல்

மேற்படி 18-03-2003 ஆண்டுற்சவ பங்குனிப்பொங்கல் தினத்தில் ஆலய வீதிகளில் வாணிபம் மேற்கொள்ளும் வணிகர்களுக்கு எதிர்வரும் 11-03-2003 செவ்வாய்க் கிழமை மு.ப. 11 மணிக்கு ஆலய காரியாலயத்தில் நில ஏல விற்பனை நடைபெறவுள்ளது என்பதை அறிய தருகின்றோம்.

(சி-8005) **பரிபாலன சபையினர்.**

## உணவு உரிமத்திற்கு விண்ணப்பிக்குக

வன்னிப் பெருநிலப்பரப்பிற்குட்பட்ட உணவு உற்பத்திகள், விற்பனைகள், களஞ்சியங்கள், ப.நோ.கூ.சங்க நுகர்ச்சி விற்பனைகள், நடமாடும் உணவு விற்பனைகள்,பல்பொருள் வாணிபங்கள், பல்பொருள் பெட்டிக்கடைகள் உள்ளடங்கலான அனைத்து உணவு கையாளும் நிலையங்களும் தமிழீழ சுகாதார சேவைகளின் 2003 ம் ஆண்டு உணவு உரிமத்திற்கு 10.03.2003ல் இருந்து 10.04.2003 வரையான காலப்பகுதிக்குள் பிரதேச,மாவட்ட இணைப்பாளர்களிடம்/மாவட்டங்களில் அமைந்துள்ள மாவட்டப் பணிமனைகளில் உணவு உரிமத்திற்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

பணிப்பாளர்,
தமிழீழ சுகாதார சேவைகள்.

(8001)

## விழாக் கால சிறப்பு வாணிப உரிமம்

**எதிர்வரும் 2003-03-18ஆம் நாள் இடம்பெறவுள்ள புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய ஆண்டுப் பொங்கல் நிகழ்வில் வாணிபம் நடத்தவுள்ளோர் 2003-03-11ஆம் நாள் தொடக்கம் கீழ்க் குறிப்பிடப்படுமிடங்களில் விழாக் காலச் சிறப்பு வாணிப உரிமத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.**

**01)** விழாக்கால சிறப்புச் செயலகம், புளியம் பொக்கணை.
**02)** வருவாய்ப் பகுதிச் செயலகம், விசுவமடு.
**03)** வருவாய்ப் பகுதிச் செயலகம், கிளிநொச்சி.

(3009)

உ
சிவமயம்

### கரைச்சி
### புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல்தின தண்டல் ஒழுங்குகள் பற்றிய அறிவித்தல்

மேற்படி ஆலய பொங்கல் விழா 18-03-2003 செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளது என்பதை அறியத்தந்து பொங்கல் நேர்த்திப் பொருட்கள் தண்டல், எதிர்வரும் 12-03-2003 புதன் தொடக்கம் வட்டக்கச்சி, இராமநாதபுரம், கல்மடு நகர், விசுவமடு, பிரமந்தனாறு, புன்னைநீராவி, உடையார்கட்டு, சுதந்திரபுரம், தேவிபுரம் போன்ற பகுதிகளுக்கு ஆலய சின்னம் பொறிக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களுடன் உழவு இயந்திரங்களில் தொண்டர்கள் வருகை தரவுள்ளனர் என்பதை நேர்த்திப் பொருள் கொடுக்கும் அடியவர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**ஆலய பரிபாலனசபை**

(சி-8004)

## அறிவித்தல்

### முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரின் இரண்டாவது "அதே இடத்தில் சேவை."

**அனுசரணை :- நீதி, இனவிவகார தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு.**

துணுக்காய், மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவுகளில் வாழும் பொது மக்களின் நன்மை கருதி முல்லைத்தீவு அரசாங்க அதிபர் தலைமையில் "அதே இடத்தில் சேவை" கள் வழங்க ஏற்பாடுகள் செய்யப் பெற்றுள்ளன.

இடம் :- மல்லாவி மத்திய கல்லூரி.

காலம் :- 14.03.2003 வெள்ளிக்கிழமை.
15.03.2003 சனிக்கிழமை.

நேரம் :- முற்பகல் 08. 30 மணி தொடக்கம் பிற்பகல் 04.30 மணி வரை

வழங்கப்படவுள்ள சேவைகள்:-

01. தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளல்.
02. மோட்டார் சைக்கிள் செலுத்து வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கு வதற்கான பரீட்சை நடாத்துதல்.
03. காலம் கடந்த பிறப்பு, இறப்பு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளலும், சான்றிதழ் வழங்கலும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை துணுக்காய், மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

இமெல்டா சுகுமார்,
அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு மாவட்டம்.

(சி-7806)

# ஈராக் ஆயுதக் களைவுக்கு இசைகிறதா? கண்டறிய பல மாதங்கள் பிடிக்கும்!

## 3 ஆவது அறிக்கையைச் சமர்ப்பித்து பரிசோதனைக்குழு கருத்து

**ஈராக்கின் தற்போதைய நடவடிக்கைகள் குறித்து ஐ.நா ஆயுதப் பரி சோதகர் குழு ஓரளவு திருப்தி தெரிவித்துள்ளதுடன் அதனை வரவேற்று முள்ளது. அத்தோடு ஈராக் ஆயுதங்களைக் களைவதில் ஒத்துழைக் கின்றதா என்பதைக் கண்டறிய பல மாதங்கள் பிடிக்கும் என பாதுகாப்புச் சபையில் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்ட மூன்றாவது ஈராக் குறித்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.**

ஐ.நா ஆயுத பரிசோதகர் குழுத் தலைவர் கான்ஸ் பிலிக்ஸ், மற்றும் சர்வதேச அணு சக்தி நிலையத் தலைவர் அல் பராய் டியும் தமது ஆய்வறிக்கையைப் பாதுகாப்புச் சபையில் சமர்ப்பித்திருக்கின் றனர்.

ஈராக்கின் ஒத்துழைப்பு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் கோரிக்கைகளை முற்றாக நிறை வேற்றாத போதிலும் அண்மையில் அந்த நாடு அல்சமுத் ஏவுகணைகளை அழித்தமை, ஆயுதக்களைவுக்கான ஒரு முக்கிய அறிகுறி என பிரதம ஆயுதப்பரிசோதகர் கான்ஸ்பிலிக்ஸ் தெரிவித்துள்ளார்.

ஆயுதங்களைக் களைவதில் ஈராக் ஒத்துழைக்கின்றதா? என்பதை அறிந்துகொள்ளப் பல மாதங்கள் ஆகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் ஈராக் தன்னிச்சையாக ஆயு தங்களைக் களையவில்லை எனவும் எனவே இது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என அமெரிக்காவின் ராஜாங் செயலாளர் கேள்வி எழுப்பியுள்ளார். இதற்குப் பதிலளித்துப் பேசிய கான்ஸ்பிலிக்ஸ் ஈராக் ஆயுத ஒழிப்பிற்கு அதிக ஒத்துழைப்பு அளிக்க ஆரம்பித்திருப்பதாகக் கூறியுள்ளார்.

இது போன்று தமது அறிக்கையைச் சமர்ப்பித்த சர்வதேச அணு சக்தி நிலைய தலைவரான அல் பராய்டி ஈராக் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யமுயன்றதற்கான அறிகுறி எதனையும் தாங்கள் காணவில்லை எனக் கூறியுள்ளனர்.

கடந்த மூன்று மாதங்களாக மேற்கொண்ட கடுமையான சோதனைகளின் போது ஈராக் அணு ஆயுதங்களை மீண்டும் உற்பத்தி செய்வதற்கான அறிகுறிகள் எதனையும் கண்டுபிடிக்க வில்லையெனவும் கூறியுள்ளார்.

இதேவேளை, ஈராக்கின் ஆயுதக் களைவு பிரச்சினையில் முழுமையானதொரு முடிவு இன்னமும் எட்டப்படவில்லை என்பதனை ஆயுத பரிசோதகர்கள் வெளிப்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.



பாக்தாத்தில் முஸ்தபா முகமட் ஜவாட் என்ற 13வயதுச் சிறுவன் தனது சகோதரியுடன் தமது வீட்டுத் தோட்டத்தில் பதுங்குகுழி அமைப்பதைக் காண்க

# ஏதைச் செய்வதென்று தெரியாமல் முஸ்லிம் நாடுகள் பிரிந்து நிற்கின்றன

## -கட்டார் வெளிவிவகார அமைச்சர்

எதைச் செய்வதென்று தெரியாமல் முஸ்லிம் நாடுகள் பிரிந்து நிற்கின்றன என கட்டார் வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளார்.

முஸ்லிம் நாடுகள் அனைத்தும் ஒரே குரலில் செயற்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் கட்டாரில் ஒன்று கூடிய முஸ்லிம் தலைவர்கள் மாநாட்டில் ஈராக்.குவைத் நாட்டுப் பிரதிநிதிகள் ஒருவரை ஒருவர் வசைமாரி பொழிந்துள்ளனர்.

அமெரிக்காவின் யுத்தக் கொள்கைக்கு குவைத் இணங்கப்போவது குறித்தே இந்தக் காரசாரமான வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது.

கட்டார் மாநாட்டு நிகழ்வுகள் தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்டுக்கொண்டிருந்தன. இவ்வாறான வசைமாரிகள் ஆரம்பித்ததைத் தொடர்ந்து தொலைக்காட்சி அதன்நேரடி ஒலிபரப்புச் சேவையை உடனடியாக நிறுத்திக் கொண்டுள்ளது.

ஐம்பத்தாறு நாட்டுத் தலைவர்கள் பங்குபற்றும் இக் கூட்டத்தில் வலுவான தீர்மானங்கள் எடுக்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டபோதும் அவ்வாறு எதுவுமே இடம்பெறவில்லை.

ஆனால், ஈராக் யுத்தம் தவிர்க்கப்படுவதற்காக இராஜதந்திர முயற்சிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படவேண்டும் என்ற விடயத்தில் மாத்திரம் எல்லாப் பிரதிநிதிகளும் ஒன்று பட்டு நிற்கின்றனர்.

அமெரிக்க சனாதிபதி பதவி விலக வேண்டும். உலக மக்களைச் சமாதானமாக வாழவிட வேண்டும் என கூட்ட நிகழ்வுகளின் பின்னர் ஈராக் வெளிவிவகார அமைச்சர் நாஜி சப்ரி நிருபர்களுக்குக் கூறியுள்ளார்.

அதேபோல் சதாம் ஹுசைன் தாமாகவே பதவி விலக வேண்டும் என குவைத் வெளிவிவகார அமைச்சர் சேக்ஸபா அல் அஹமட் அல் ஸபா நிருபர்களிடம் கூறியுள்ளார்.

# மதகுருமார் வேடமிட்டோர் குடியிருப்பு மீது தாக்குதல்

## -இரு இஸ்ரேலியர் பலி

(டெல் அவிவ்)

யூதமதக்குருக்களின் வேடத்தில் நேற்று முன்தினம் மேற்குக் கரைக் குடியேற்றத் திட்டம் ஒன்றினுள் புகுந்த பலஸ்தீனர்கள் நடத்திய தாக்குதலில் 02 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலியத் துருப்புக்களும் டாங்கிகளும் காஸா பிராந்தியத்தில் கிராமம் ஒன்றைக் கைப்பற்றியதனை அடுத்து பலஸ்தீனப் போராளிகளின் இந்தத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது. பலஸ்தீனக் குடியேற்ற திட்டங்கள் மீது ஸ்ரேலியப் படைகள் நடத்திய மூன்று தாக்குதல்களில் 07 பலஸ்தீனப் போராளிகள் கொல்லப் பட்டுள்ளதாக இஸ்ரேலியப் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆலோசனை

(தெஹ்ரான்)

ஈராக்கில் சதாம் ஹுசைன் ஆட்சியை அகற்ற அமெரிக்கா போர் தொடுப்பதற்கு மாறாக ஐ.நா மேற்பார்வையில் அங்கு தேர்தலை நடத்தலாம் என்று ஈரான் ஆலோசனை தெரிவித்துள்ளது.

தெஹ்ரானில் ஈரானிய வெளியுறவு அமைச்சர் கலால் கர்ராஸிஈராக் உள்நாட்டு விவகாரத்தில் தலையிட நாம் விரும்பவில்லை என்று வலியுறுத்தினார்.



மேற்குக்கரை நேப்லஸ் நகரில் இஸ்ரேலிய இராணுவம் வீடுவீடாகத் தேடுதல் நடத்தும் வேளையில் பலஸ்தீனரின் கடையொன்றில் நிலையெடுத்து நிற்கும் இராணுவ வீரன்.

# ஐவரிக்கோஸ்ரின் மேற்கு நகரில் படையினர் -கிளர்ச்சியாளர் கடும் மோதல்

## -பொதுமக்கள் பலரும் பலியாகினர்

(அபிட்கான்)

ஐவரிக்கோஸ்ரின் மேற்கு நகரான பங்கலோவில் நேற்று முன்தினம் கடும் சண்டை இடம் பெற்றுள்ளது.

கிளர்ச்சி வாதிகளின் கட்டுப்பாட்டிலிருக்கும் பங்கலோ நகர் மீது சனாதிபதி புளோரன்ஸ் கபோவின் படைகள் கனரக ஆயுதங்கள் கொண்ட தாக்குதலை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இத்தாக் குதலின்போது பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டதாக கிளர்ச்சிவாத அமைப்பு ஒன்றின் தளபதி கூறியுள்ளார்.

ஐவரிக்கோஸ்ரில் சமாதான நடவடிக்கைகள் பிரான்சின் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் வேளையில் அதனை எதிர்த்து வரும் பிறிதொரு கிளர்ச்சி குழுவினரே தொடர்ந்து மோதல்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இறுக்கமான நடைமுறை

(சென்னை)


பொடோ சட்டத்தின் கீழ் கைதாகி சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை.கோ. மற்றும் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் ஆகியோரைச் சந்திக்க புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

மேலும் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ நெடுமாறனை சந்திக்க செல்பவர்கள் மீதே அதிக கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரைத் தனியாக எவரும் சந்திக்க காவல் துறையினர் முற்றாக அனுமதி மறுப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது

# பார்வையாளராக தென்னாபிரிக்கா

உலகக்கிண்ணப் போட்டிகளின் முதல் சுற்று ஆட்டங்கள் நிறைவுபெற்று சுப்பர் ஆறுக்குள் அணிகள் பிரவேசித்து விட்ட நிலையில் உலகக்கிண்ணம் கிடைக்குமா? கிடைக்காதா? பரபரப்பு உச்சக்கட்டத்தை அடைந்து விட்டது.

இந்நிலையில் "சுப்பர் சிக்ஸ்" போட்டி களும் ஆரம்பமாகிவிட்டது. எனவே எதிர் வரும் நாட்கள் உலக மக்கள் எல்லோரையும் அனைத்து கருமங்களையும் மறந்து போகும்



நிலையை உண்டாக்கப் போகிறது. 'உலகக் கிண்ணக்கிரிக்கெட்டை' தவிர.

அதிஸ் டம் மழைபோல் வந்தது என்று எதிரணியினர் குறைபட்டுக்கொண்டுள்ள நிலையில் எதிர் பார்க்கப்பட்ட அணிகள் சுப்பர் சிக்ஸ் வாய்ப்பை இழந்து விட்டது. இதனால் சொந்த நாட்டில் சுப்பர்சிக்ஸ் போட்டிக்கு தானும் முன்னேற முடியாது இனிவரும் போட்டிகளைப் பார்வையாளராக பார்க்கும் நிலை தென்னாபிரிக்காவுக்கு ஏற்பட்டுள்ளது. இது அந்நாட்டு ரசிகர்களையும், வீரர்களையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளதுடன் இதுவரை அவர்கள் அதிலிருந்து மீண்டு வரவில்லை என வும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் உலகக்கிண்ணப் போட்டியில் தென்னாபிரிக்க ரசிகர்களின் ஆர்வம் குறைந்துள்ள நிலையில் நேற்று முன்தினம் சுப்பர் சிக்ஸ் ஆட்டங்கள் ஆரம்பமாகின.

இதன் முதல் போட்டியில் சிறிலங்கா அணி அவுஸ். அணியை எதிர்த்தும் இந்திய அணி கென்யா அணியை எதிர்த்தும் மோதின.

செஞ்சூரியன் பாக். அரங்கில் நடைபெற்ற சிறிலங்கா அவுஸ். அணி மோதல் மிகவும் பரபரப் பாக எதிர்பார்க்கப்பட்டது. நாண யச் சுழற்சியே இரு அணிகளின் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும் காரணியாக அமையும் என முன்கூட்டியே தெரிவிக்கப் பட்ட நிலையில் வெற்றிபெற்ற அவுஸ். அணி முதலில் துடுப்பெடுத்தாடி 319 ஓட்டங்களை அதிரடியாகக் குவித்தது. இதற்காக ஐந்து விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்தது.

ஆரம்பம் முதலே நிதானத்துடன் கூடிய அதிரடித் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த அணியின் உபதலைவர் அடம்கில்கிறிட்ஸ் அணித்தலைவர் ரிக்கிபொண்டிங் இரு வரும் சேர்ந்து சிறிலங்கா பந்து வீச்சாளரைத் துவம்சம் செய்து ஓட்டவேகத்தை மலை போல் உயர்த்தியதன் மூலம் எதிர ணிக்கு கடினமான வெற்றி இலக்கு நிர்ணயிக் கப்பட்டது.

பொண்டிங் 114 ஓட்டங்களையும், கில்கிறிஸ்ட் 99 ஓட்டங்களையும் பெற்றனர். இவர்களுக்குத் துணையாக டெமியன் மார்டீன் 52 ஓட்டங்களைப்பெற்றார்.

இங்கிலாந்து அணியுடனான கடினமான வெற்றியுடன் இது வரை எந்த அணியும் வெற்றி கண்டிராத அவுஸ்திரேலிய அணியை சிறிலங்கா அணிதான் வெற்றிகொள்ளும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவுஸ் அணியோ தான் எப்படி உலக அளவில் சிறந்த அணியாக விளங்குகிறோம் என்பதை இப்போட்டியில் சகலதுறைகளிலும் நிரூபித்துக்காட்டியமை அணித் தலைவர் பொண்டிங்கிற்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகவும் அமைந்துள்ளது.

320 ஓட்டம் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய சிறிலங்கா அணிக்கு ஆரம் பமே சரிவு. அதிரடி வீரர் ஜெயசூரியாவின் கையை பிரட்லி பதம்பார்க்க அவர் களத்தைவிட்டு வெளியேறினார். தொடர்ந்து களம் புகுந்த துடுப்பாட்ட வீரர்கள் அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர்களை எதிர்கொள்ள முடியாது மளமளவென ஆட்டமிழந்து ஓய்விடம் திரும்பினர். இது அவுஸ். அணித் தலைவர் எதிர்பார்த்தவாறு

## "சுப்பர் சிக்ஸ்" போட்டிகள் ஆரம்பம்!

அமைந்திருந்தது. அதிகபட்சமாக அரவிந்த டிசில்வா 92 ஓட்டங்களைப் பெற்றார். இதற்குத் துணையாக சங்கக்காரவும் பந்து வீச்சாளர் வாசுவும் இருந்தனர்.

இவ்வெற்றிமூலம் 16 புள்ளிகளைப் பெற்று அவுஸ்திரேலிய அணி அரையிறு திப்போட்டிக்குத் இரண்டு போட்டிகள் மீதம் இருக்கும் நிலையில் தெரிவாகியுள்ளது.

மற்றைய போட்டி இந்தியா - கென்யா அணிகளுக்கிடையில் நடைபெற்றது. இப் போட்டி முதல் சுற்று ஆட்டத்தில் சிறிலங்கா அணியை அதிர்ச்சித் தோல்விக்கு கென்ய அணி உட்படுத்தியிருந்தமையால் பரபரப் பாக எதிர்பார்க்கப்பட்டது. அவ்வாறே இறுதி வரைக்கும் அதற்குக் குறைவில்லை.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கென்யா முதலில் துடுப்பாட தீர்மானித்து ஆட்டத்தை ஆரம்பித்த போதும் ஓட்டம் பெறுவதில் மந்த நிலை தோன்ற விரைவான ஓட்டங்களைப் பெறும் முயற் சியில் இறங்கினர். இம் முயற்சி இந்திய களத் தடுப்பாளர்களின் மோசமான களத் தடுப்பால் பயனுள்ளதாக அமைய அவ்வப்போது நான்கு ஓட்டங்களையும் ஆறு ஓட்டங்களையும் பெற்று இறுதியாக ஆறு இலக்குகளை இழந்து 225 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஒபேயோ 79 ஓட்டங்களைப் பெற்றார். இத்தனைக்கும் இந்திய வீரர்கள்



## ஐ.சி.சி. உலகக் கிண்ண கிரிக்கட் போட்டி 2003

ஐந்து பிடியெடுக்கும் வாய்ப்புக்களை நழுவ விட்டமை குறிப்பிடத்தக்கது.

பதிலுக்கு 226 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களம் புகுந்த இந்திய அணி இலகுவாக வெற் றியை பெற்றுவிடும் என எதிர்பார்த்த ரசிகர் களுக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி இந்தியா வின் பீரங்கிகள் என வர்ணிக்கப்படும் சேவாக் சச்சின், முகமட் ஹைப் ஆகியோரின் விக்கட்டுக்களை வெறும் 24 ஓட்டங்களுக்கு இழந்து இக்கட்டான நிலைக்கு தள்ளப் பட்டது. இதனால் கென்ய அணி வீரர்களின் உற்சாகம் அதிகரித்ததுடன் வெற்றிக்கான போராட்டத்தில் முழுமையாக இறங்கியதை அவர்களின் துல்லியமான பந்து வீச்சும் அபார களத்தடுப்பும் நிரூபித்து நின்றன. இது கென்ய அணியும் பலமான அணி என்பதை நிரூபித்தது. இதன் மூலம் கென்யா அணி எந்தவொரு அணிக்கும் சளைத்தது அல்ல என்பது நிரூபணமாக்கியது.

இந்நிலையில் வெற்றிபெறுவதே தாகம்



எனக்கொண்ட அணித்தலைவர் கங்குலி யினதும் யுவராஜ்சிங்கினதும் துணிச்சல் மிக்க துடுப்பாட்டத்தினால் 47.5 ஓவரில் வெற்றி இலக்கை அடைந்து அரையிறுதிப் போட்டிக்கான வாய்ப்பை இந்தியா பிரகாசமாக்கியது.

கங்குலி 107 ஓட்டத்தையும் யுவராஜ்சிங் 58 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றனர்.


சகல துறைகளிலும் திறமையைக் காட்டி வரும் இளம் வீரர்களைக் கொண்ட டெஸ்ட் அந்தஸ்து பெறாத கென்யா அணி எதிர் காலத்தில் சர்வதேசத்தில் சிறந்த அணியாக மிளிரும் எனத் துணிந்து கூறலாம்.

- ஜெயந்திரன்

# எதிர்பார்ப்புகளை பொய்யாக்கிய முதல் சுற்றுப் போட்டிகள்

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் முதற் சுற்று ஆட்டங்கள் நிறைவடைந்து இரண்டாவது சுற்றான சுப்பர் சிக்ஸ் ஆட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில், சுப்பர் சிக்ஸிற்குள் நுழையும் என எதிர்பார்க் கப்பட்ட / கருதப்பட்ட அணிகளின் நிலையை எண்ணிப்பார்ப்போமானால் உண்மையில் கவலை அளிக்கும் விடயமாகவே அது இருக்கும்.

ஏனெனில், டெஸ்ட் அந்தஸ்துப் பெறாத கென்யா மற்றும் பலம் குன்றிய நாடு என கருதப்பட்ட சிம்பாப்வே போன்ற அணிகள் சுப்பர் சிக்ஸிற்குள் நுழைந்தமை மேற்படி





எதிர்பார்க்கப்பட்ட அணிகள் அடுத்த சுற்றுக் குத் தகுதி இழந்தமை ஒரு காரணமாக இருக்கலாம். இருந்தபோதும் கிரிக்கெட்டைப் பொறுத்து இது போன்ற சம்பவங்கள் நிகழ்வது என்பது எதிர்பார்க்கப்படக்கூடிய வையே ஆகும்.

இந்த வகையில், பெரும்பாலும் சுப்பர் சிக்ஸிற்குள் நுழையும் என கருதப்பட்ட அணிகளில் தென்னாபிரிக்கா மற்றும் மேற்கிந்தியத்தீவுகள் அணிகளே மிக முக்கிய இடத்தை வகித்தன. இதற்கு அடுத்த படியாக இங்கிலாந்து, பாகிஸ்தான் அணிகளும் சுப்பர் சிக்ஸிற்குள் நுழைவதற்குப் போராடும் எனக் கணிக்கப்பட்டது. இந்நிலையில் இக்கருத்துக் கணிப்புக்கள் யாவும் சிதறடிக்கப்பட்டு விட்டதென்றே கூறவேண்டும்.

தென்னாபிரிக்கா அணியைப் பொறுத்து, உலகக் கிண்ணப் போட்டிகளை நடாத்தும் நாடுகளில் ஒன்றாக இருப்பதினாலும், பெரும்பாலான போட்டிகள் அந்நாட்டு ஆடுகளங்களிலேயே நடாத்தப்படுவதினாலும் அவ் அணியின் சுப்பர் சிக்ஸிற்கான வாய்ப்பு கூடுதலாக எதிர்பார்க்கப்பட்டதோடு, கருத்துக் கணிப்பில் அவுஸ்திரேலிய அணிக்கு நிகராகக் கருதப்பட்டது.


ஆனால், தென்னாபிரிக்காவின் மேற்கிந்தியத்தீவுகள் அணியுடனான முதல் ஆட்டமே அவர்களின் நிலைமையைத் தடுமாறச் செய்ததோடு, நியூசிலாந்துடனான அவர்களின் ஆட்டம் சுப்பர் சிக்ஸிற்கான வாய்ப்பை கேள்வியுறச் செய்ததுடன், சிறிலங்கா அணியுடனான போட்டி அவர்களின் சுப்பர் சிக்ஸிற்குள் நுழையும் கனவைக் கலைத்ததுடன் முதல் சுற்றோடு வெளியேறவேண்டிய ஒரு பரிதாப நிலைமையையும் ஏற்படுத்தியது.

அடுத்து மேற்கிந்தியத்தீவுகள் அணியைப் பார்ப்போமானால், அவர்கள் சுப்பர் சிக்ஸிற்குள் மிகவும் இலகுவாக நுழையும் என பெரும்பாலும் விமர்சகர்களால் நம்பப்பட்டது.

ஏனெனில், இந்தியாவில் நடைபெற்ற இந்திய அணியுடனான ஒரு நாள் போட்டியில் அவர்கள் ஆடிய விதம் 1975, 1979ஆம் ஆண்டுகளில் அவர்களில் இருந்த நிலையை நினைவுபடுத்தும் வகையில் அமைந்தது.

அதற்கு அமையவே, உலகக் கிண்ணப் போட்டியின் தென்னாபிரிக்கா அணியுடனான முதல் ஆட்டத்தில் பெரும் பரபரப்புக்கு மத்தியில் பெற்ற வெற்றியை அடுத்து சுப்பர் சிக்ஸிற்குள் நுழையும் வாய்ப்பு வெகு இலகுவாக இருக்கும் என்றே கிரிக்கெட் விமர்சகர்களால் கருதப்பட்டது.

ஆனால், நியூசிலாந்துடனான தோல்வி அவர்களுக்குச் சற்று தடுமாற்றத்தை ஏற்படுத்தினாலும், சிறு நம்பிக்கையையும் கொடுத்தது. அதாவது, தென்னாபிரிக்கா அணியுடனான போட்டியில் அணி இக்கட்டான நிலையில் இருந்தபோது தன்னு டைய முழுத்திறமைகளையும் வெளிப் படுத்தி 116 ஓட்டங்களைப் பெற்று வெற்றிக்கு வழி சமைத்த பிறையன் லாறாவின் எதிர்பாராத ரன் அவுட்டே தோல்விக்கு



காரணம் எனக் கருதியிருந்தனர்.

ஏனெனில், உலகின் முதல் நிலை ஆட்டக்காரர்களில் ஒருவரான பிறையன் லாறா பலம் வாய்ந்த தென்னாபிரிக்கா பந்து வீச்சாளர்களுக்கு எதிராகப் பெற்ற சதம் அவர் மீண்டும் 'போமுக்கு' வந்துவிட்டார் என்ற கருத்தையே அனைவர் மத்தியிலும் தோற்றுவித்தது.

ஆனால், சிறிலங்கா அணியுடனான போட்டியில் இருபது பந்து வீச்சுக்களை எதிர்கொண்டு ஒரு ஓட்டத்தைப் பெற்று ஆட்டம் இழந்தமை அவர் மீது இருந்த நம்பிக்கையை இழக்க வைத்ததோடு, மேற்கிந்தியத்தீவுகள் அணியின் சுப்பர் சிக்ஸிற்குள் நுழையும் வாய்ப்பையும் இழக்கச் செய்தது.

**பூ.சுபானந்**

மேலும், சிறிலங்கா அணியுடனான போட்டியில் சர்வான் காயத்துக்குள்ளாகி போட்டியின் இடையே வெளியேறியமையும், பங்களாதேஷ் அணியுடனான போட்டி மழை காரணமாகக் கைவிடப்பட்டு போட்டி விதி முறைக்கமைய இரு அணிகளுக்கும் தலா இரு புள்ளிகள் வழங்கப்பட்டமையும் அவர்களின் சுப்பர் சிக்ஸிற்குள் நுழையும் வாய்ப்பை இல்லாது ஒழித்ததெனலாம்.

அடுத்து, பாகிஸ்தான், இங்கிலாந்து அணிகளைப் பொறுத்து, உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு முன்பே அவ்வணிகள் மீதான எதிர்பார்ப்பு ஓரளவு குறைவாகவே காணப்பட்டது.

(7ஆம் பக்கம் பார்க்க)

# சீர்கெட்ட பாதைகளில் போராடும் மக்கள் சேவையினர்

**வ**ன்னிப் பகுதியில் இருந்து வடபகுதிக்கும் தென்பகுதிக்குமான பாதைகள் திறந்து விடப்பட்டதைத் தொடர்ந்து இப்பகுதியில் வாகனப் போக்குவரவுகள் அதிகரித்து விட்டன.

சமாதான காலம் நிலவுவதால் மக்களின் போக்குவரவு நடவடிக்கைகளும் திடீரென அதிகரித்துள்ளன.

நெருக்கடி நிறைந்த போர் நிலவிய காலத்தில், போக்குவரத்துச் சாதனங்களுக்குத் தட்டுப்பாடு நிலவிய காலத்தில் தமிழீழ போக்குவரவுக் கழகத்தினரின் அர்ப்பணிப்புடனான பணியினால் மக்கள் நெருக்கடியான நிலையிலும் ஓரளவு தமது பயணங்களை மேற்கொண்டு வந்தனர்.

ஆனால் தற்போதைய காலத்தில் மக்களின் தொடர்புகள் விரிவடைந்த நிலையில் விரைவானதும், இலகுவானதுமான பயணங்களையே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

> **வன்னிப் பகுதி வீதிகள் சீராக்கப்பட்டு பேருந்து போக்குவரவில் இலகு நிலை தோன்றும் போது கட்டணங்கள் குறைக்கப்படும்.**


ஆயினும் வன்னிப் பகுதியில் உள்ள வீதிகள் எதுவுமே தனது பழைய நிலைக்குத் திரும்பாததால் நேர விரயத்துடனும் தூசி படிந்த அசௌகரியமான சூழலிலுமே இவர்கள் போக்குவரவில் ஈடுபடுகின்றனர்.

இந்தச் சமாதான காலத்திலும் மிக விரைவாக இப்போக்கு வரவில் மாற்றம் ஏற்படாதா என மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

பாதைகள் மோசமான நிலையில் இருந்தாலும் வன்னியில் புதிய பேருந்துகளின் வருகை அதிகரித்திருப்பதை அவதானிக்க முடிகிறது. அத்துடன் பேருந்துகளின் சேவைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. இந்த மாற்றமானது மக்கள் மனத்தில் ஓரளவு திருப்தி உணர்வை ஏற்படுத்துகின்றது.

ஆயினும் இந்தப் போக்குவரவுப் பணி மேலும் சீரடைந்து ஆரோக்கியமான பயணத்துக்கு வழி ஏற்பட வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

மக்களின் இவ்வாறான எதிர்பார்ப்புக்களையும், அவர்கள்



மனதில் எழும் சில சந்தேகங்களையும் தீர்ப்பதற்காக தமிழீழ போக்குவரவுக்கழக நடுவப்பணியக முகாமையாளர் போக்குவரவுப் பணி தொடர்பாக மக்கள் தெளிவுறும் வகையில் கருத்துக்கள் வழங்கினார்.

பொது முகாமையாளரின் கருத்தின்படி மக்கள் சேவையான இப்பணியினை திறம்பட மேற்கொள்வதில் அவர்கள் அல்லும் பகலும் அயராது பாடுபடுவதை உணர முடிகிறது.

இப்பணி தொடர்பாக அவர் மிகத் தெளிவான விளக்கங்களை மக்களுக்கு வழங்கினார்.

தமிழீழ போக்குவரவுக் கழகம் 1990ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 1994ஆம் ஆண்டு வரை சிறிய அளவில் இயங்கி வந்தது. அதன் பின் மிகப் பெரிய அளவில் தமிழீழ போக்குவரவுக்கழகம் இயங்கத் தொடங்கியது.

அந்தக் காலப்பகுதியில் இருந்த போர்க்கால சூழல் நெருக்கடிகளால் ஊர்திகளை புதிதாகக் கொள்வனவு செய்ய முடியாத நிலை, எரிபொருள் விலையேற்றம், உதிரிப் பாகங்கள் பெறமுடியாத நிலை என்பவற்றால் போக்கு வரத்து மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

போதிய அளவு ஊர்திகளைக் கொள்வனவு செய்யக் கூடிய வாய்ப்பு 2002ஆம் ஆண்டு ஏற்பட்ட சமாதான சூழலால் கிடைத்தது.

கடந்த ஆண்டு தொடக்கம் பொது மக்களோ அரச ஊழியர்களோ கடிதம் மூலமாகவோ அல்லது பொதுக் கூட்டங்களிலோ புதிதாகக் கோரும் பேருந்துப் பணிகளில் தொண்ணூற்றொன்பது வீதம் பூர்த்தி செய்யப்படுகின்றன.

இதில் நயம் தரக்கூடிய பணிகள் என்பதைவிட நயம்தர முடியாத, சேவை நோக்கில் செய்யப்படும் பணிகளின் எண்ணிக்கை தான் அதிகம்.




வன்னிப்பகுதியில் சேவையாற்றுவதற்கென யாழ். குடாநாட்டில் இருந்தோ அல்லது வவுனியா பகுதியில் இருந்தோ வரும் பணியாளர்கள் தமது பணிகளை வன்னியின் எப்பகுதியிலும் சென்று செய்துவிட்டுப் போவதற்கு இலகுவாக விசேட அனுமதிகள் பேருந்துகளில் பயணிப்பதற்கு வழங்கப்பட்டுள்ளன.

பே குவரத்துத் தொடர்பாக தமிழீழ போக்குவரவுக் கழகத்தினருக்குக் கிடைக்கும் கடிதங்களுக்கு உடனுக்குடன் பதில் வழங்கப்படுவதுடன் கோரப்படும் பணிகளும் ஆரம்பிக்கப்படுகின்றன.

பாடசாலை மாணவர்களின் தேவை கருதி பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்துக்கும், முடிவடையும் நேரத்துக்கும் அமைவாகப் பேருந்து சேவைகள் நடத்தப்படுகின்றன. கடந்த வருடம் வரை இவர்கள் இலவசமாகவே பயணம் செய்தனர். இதில் இடம்பெறும் மோசடிகளைத் தவிர்ப்பதற்காக இருபத்தைந்து ரூபா கட்டண அறவீட்டில் அனுமதி அட்டை வழங்கப்படுகிறது. வறிய மாணவர்கள் என பாடசாலை அதிபர் உறுதிப்படுத்தினால் இக்கட்டணமும் அறவிடப்படுவதில்லை.

ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடும் போது தற்போது வன்னிப்பகுதியில் பேருந்து கட்டணங்கள் அதிகம்.

வன்னிப்பகுதியில் உள்ள வீதிகள் இதுவரை சீராக்கப் படவில்லை. வீதிகளே இல்லாத குன்றும் குழியுமான தடங்களிலேயே பணிகள் இடம் பெறுகின்றன. இதனால் நேர விரயமும், எரிபொருள் விரயமும், ஊர்தி உடைவு களும் ஏற்படுகின்றன. கொள்வனவு செய்யப்பட்டுள்ள புதிய ஊர்திகளே தற்போது உடைவு கண்டு வருகின்றன. இதனால் குறிப்பிட்ட ஊர்திகள் பணியில் ஈடுபடும் எண்ணிக்கை மட்டுப்படுத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது.

வன்னிப்பகுதி வீதிகள் சீராக்கப்பட்டு வாகனப் போக்குவரத்தை இலகுவாக மேற்கொள்ளக்கூடிய நிலை தோன்றும் போது பேருந்து கட்டணத்தில் மாற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு கட்டணம் குறைக்கப்படும். இதில் எந்த வித மாற்றுக் கருத்தும் இல்லை. தற்போது போக்குவரத்தில் உள்ள நெருக்கடி என கருதப்படுவது இந்த பேருந்து கட்டண உயர்வு மட்டுமே ஆகும்.

பாடசாலைகள் மற்றும் ஒவ்வொரு பணி அலுவலகங்களும் தமது பணி ஆரம்பிக்கும், முடிவடையும் நேரங்களை மிகக்குறுகிய நேரத்தில் வேறு வேறுவிதமாக வைத்துள்ளனர். இதனால் இவர்களுக்கென மேற்கொள்ளப்படும் சேவைகளை அதிகரிக்க முடியாது.

எனவே இவ்விடயங்களில் சம்பந்தப்படும் அலுவலகங்கள் மிகக்குறுகிய நிமிட நேர வித்தியாசத்தினை மாற்றி தமது பணிகளை சீர்செய்வார்களானால் அவர்களுக்கான போக்குவரவு சேவையினைத் திறம்படச் செய்யமுடியும்.

பேருந்துப்பணி தொடர்பான கருத்துக்கள், மாற்று ஆலோசனைகள், என்பவற்றை பொதுமக்களோ அல்லது பொதுமக்கள் நலன்சார்ந்தவர்களோ தமிழீழ போக்குவரவுக் கழகத்தினருக்கு தெரியப்படுத்தமுடியும். இவ்வாறான கருத்துக்களும், ஆலோசனைகளும் ஆரோக்கியத்துடன் வரவேற்கப்படுகின்றன.

பேருந்துப் பணிகள் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டு மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்குவதற்கு இவை வலுச்சேர்ப்பதாக அமையும்.

ஊர்தி ஓட்டுநர்களுக்கோ, நடத்துநர்களுக்கோ எமது பகுதியில் எதுவித தட்டுப்பாடும் இல்லை. புதியவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டு அவர்களுக்கான போதிய பயிற்சியும், ஊதியமும் வழங்கப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தமிழீழ போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியும் ஓட்டுநர்களோ, நடத்துநர்களோ மது, புகைத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்பதில் வலுவான அக்கறை செலுத்தப்படுகிறது. இந்த வருட முடிவுக்குள் வாழ்நாள் பூராவும் இவ்வாறான பழக்க வழக்கமற்றவர்களையே பணியில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இவ்வாறான பழக்கமுடையவர்கள் பணியில் இணைத்துக்கொள்ளப்படுவதில்லை.

வன்னியில் சேவையில் இருந்த ஐம்பது வீதமான பழைய பேருந்துகள் நீக்கப்பட்டுள்ளன. இவ்வருடம் மிகவும் இறுக்கமாக இருந்து, தனியாரிடமும் போக்குவரவுக் கழகத்திடமும் இருந்த இந்த வகைப் பேருந்துகள் நீக்கப்பட்டுள்ளன.

மக்களுடைய போக்குவரத்துக்கு வசதியாக உயர்ந்த கூரை உள்ள பெரிய ஊர்திகள் நீண்ட தூரபயணத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. சிறிய பேருந்துகளிலும் உயர்ந்த கூரையுள்ள ஊர்திகளே பணியில் அமர்த்தப்படுகின்றன.

வன்னியில் பணியில் ஈடுபடும் மக்கள் போக்குவரவுப் பேருந்துகள் அவ்வழியின் கட்டணவிரிப்பை பேருந்தில் மக்களுக்கு தெரியக்கூடியவகையில் ஒட்டும்படி பணிக்கப்பட்டுள்ளது. இதில் போக்குவரவுக்கழக பேருந்துக்கோ தனியார் பேருந்துக்கோ மாறுபட்டதாக இல்லை. இதனை மக்கள் பார்வையிடுவதன் மூலம் தமது பயணத்தூரத்தின் கட்டணத் தொகையினை தெரிந்து கொள்ள முடியும். இவ்வாறான கட்டணவிரிப்பு இல்லாத பேருந்துகள் தொடர்பாக மக்கள் ஆதாரத்துடன் போக்குவரவுக் கழகத்துக்கு முறையிடவும் முடியும்.

போக்குவரத்துப் பணி என்பது ஒரு சேவையே ஆகும். இது மக்கள் சார்ந்த பணி. எனவே இப்பணியில் ஈடுபடும் நடத்துநர்களும் சாரதிகளும் மக்களுடன் அன்பாகப் பழக வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதேபோன்று

> **பேருந்துப் பணி தொடர்பான கருத்துக்கள் மாற்று ஆலோசனைகள் அனைவரிடமிருந்தும் தமிழீழ போக்குவரவுக் கழகத்தினரால் ஆரோக்கியத்துடன் வரவேற்கப்படுகின்றன.**

மக்களும் நிலைமைகளைப் புரிந்துகொண்டு முரண்பாடுகள் வருவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

போக்குவரவு தொடர்பாக மக்களுக்கு சிறந்த பணியாற்ற நாம் விரைந்து நிற்கின்றோம் என பொது முகாமையாளர் தனது கருத்துக்களை வழங்கினார்.

வன்னிப்பகுதி வீதிகள் மிக விரைவாகப் புனரமைக்கப்பட்டு பேருந்துப்பணி நிறைவுடன் இடம்பெற சகல தரப்பினரும் ஒத்துழைப்பார்கள் என எதிர்பார்ப்போமாக.

- ஜெயக்குமார்

# மன்னார் மாவட்டத்தில் நன்னீர் மீன்பிடி திட்டத்தை மேம்படுத்த நடவடிக்கை

**மன்னார் மாவட்டத்தில் நன்னீர் மீன்பிடித் தொழிலை மேம்படுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. கடந்த செவ்வாயன்று பரப்பாங்கண்டல் சிறுகுளம் புனிதவேளாங்கண்ணி ஆலயப் பகுதியில் இடம்பெற்ற கூட்டத்தில் மன்னார் மீனவ சங்கங்கள் அனைத்தும் கலந்து கொண்டன.**

இந்நிகழ்வில் மாவட்டத்திலுள்ள அனைத்துச் சங்கங்களின் நிர்வாக உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். நிகழ்வில் மன்னார், வவுனியா, முல்லை நீர்வள உயிரியல் அதிகாரி சுதாகர், உலக உணவு ஸ்தாபன பிரமுகர் தயாபரன், மற்றும் உணவு பதனிடல் போதனா சிரியர்கள், பொறியியலாளர்கள், 'ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிறுவனத்தின் அதிகாரிகள், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் மன்னார் மாவட்டத்தின் இணைப்பாளர், பிரதேச இணைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலின்போது மீன்பிடி சம்பந்தமாகவும் மீன்வளர்ப்பு சம்பந்தமாகவும் ஆராயப்பட்டதுடன் ஆரம்பத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட இடத்திலேயே மீளவும் இத்திட்டம் அமுல்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்திடம் கேட்டுக்கொண்டதற்கு அமைய நிறுவன அதிகாரி சம்மதம் தெரிவித்தார்.

மேலும், மன்னார் மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பிரதேச இணைப்பாளர் கருத்து வழங்குகையில்; 20 வருடம் போரினால் பாதிக்கப்பட்ட மீனவ குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக குல்லா, வலை, கடன்வழங்கல், நல்லின மீன்குஞ்சுகள் வளர்ப்பு, ஐஸ் தொழிற்சாலைகள் அமைத்தல், நடமாடும் போக்கு - வரத்து மூலமாக குளிர்சாதன வாகனம் வழங்கி, வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் முகமாகக் கலந்து கொண்டிருக்கும் நிறுவனங்கள் யாவும் அக்கறைகொண்டு உதவி வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

## பிற்போடப்பட்டுள்ளது

கணடாவளைப் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையில் 9-3-2003,10-03-2003 திகதிகளில் பரந்தன் இளைஞர் வட்ட மைதானத்தில் நடைபெற இருந்த இறுதி தடகள விளையாட்டுவிழா தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாகவும் இவ்விளையாட்டு விழா நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் கண்டாவளைப் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் ஆனந்தராஜ் அறிவித்துள்ளார்.

## மலசல கூடக் குழியிலிருந்து இராணுவ எறிகணை மீட்பு

(முள்ளியவளை)

முல்லைத்தீவு நகரப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தால் விட்டுச்செல்லப்பட்ட எறிகணை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

முல்லை மாவட்ட விவசாய உதவி ஆணையாளர் செயலகவளாக மலசலகூடக் குழியிலிருந்து இது மீட்கப்பட்டுள்ளது.

தற்போது அச்செயலக புனரமைப்பு வேலைகள் செய்யப் பட்டு வருகின்றன. இச்செயலக புனரமைப்பில் ஈடுபட்ட பணியாளர்கள் மலசல கூடக் குழியினைத் திருத்துவதற்காக முற்பட்ட போதே அக்குழிக்குள் எறிகணை இருப்பதைக்கண்டு அதனை மீட்டுப் பாதுகாப்பாக வைத்தனர். (ஆ)

## பளை பிரதேச செயலர் பிரிவில் இரு நாள் இடம்பெயர்சேவை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பிரதேச செயலர் பிரிவில் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகள், பழைய பதிவுகளில் திருத்தங்கள் மேற்கொள்ளுதல் தொடர்பான இடம் பெயர் சேவை இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் 13 ஆம் திகதிகளில் பளைப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ள இடம்பெயர் சேவையின்போது கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்ற சேவைகளில் பதிவுகளை மேற்கொள்ளாத, அதாவது கண்டாவளை, கரைச்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்டவர்களும் பதிவு செய்யலாம் எனவும் அன்றைய தினம் பளைப் பிரதேச கிராம உத்தியோகத்தர்களையும் முள்ளிப்பற்று, புலோப்பளை பகுதிப் பதிவாளர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு மாவட்டப் பதிவாளர் கேட்டுள்ளார். (பா)

## வீதியில் எழும் தூசுப் படலத்தால் மக்கள் பெரும் பாதிப்புக்கு முகம் கொடுப்பு

(உடையார்கட்டு)

பரந்தன் - புதுக்குடியிருப்பு பிரதான வீதியில் வேகமாகச் செல்லும் பல்வேறு வகையான ஊர்திகளாலும் தூசுப்படலம் கிளப்பப்பட்டு நிமிடக் கணக்கில் மேலெழுவதால் பலருக்கும் இன்னல்களைத் தோற்றுவிக்கிறது.

தூசிப் படலத்தால் நோயாளிகள், வர்த்தகர்கள், பயணிகள் அல்லற்படுவதை அவதானிக்கலாம். வர்த்தக நிலையங்கள் ப.நோ.கூ சங்க விற்பனைக் கிளைகள் ஆகியவற்றில் அத்தியாவசியப் பொருட்களில் தூசு படிகிறது இதில் சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கக் கூடிய நுண்கிருமிகளும் காணப்படலாம். அதன் காரணமாக நுகர்ச்சியாளருக்கு நோய் ஏற்பட வாய்ப்பு உண்டு.

இதே போல் தூசால், வேறு நுகர்வுப் பொருட்கள் பாவனைப் பொருட்களும் பழுதடையக் கூடிய சந்தர்ப்பமும் காணப் படுகிறது. இத் தூசிப்படலம் எழுவதைத் தடுக்கும் வகையில் வீதியை தார் போட்டுச் செப்பனிடுமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (19)

## சிங்களத்தில் சுற்று நிருபம்; அதிகாரிகள் திண்டாட்டம்!

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் அமைச்சில் இருந்து தனிச்சிங்களத்தில் சுற்று நிருபங்களும், கடிதங்களும் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன.

இதனால் வடக்குக் கிழக்கில் உள்ள அதிகாரிகளும், ஊழியர்களும் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

அண்மையில் கிராம அலுவலர்களின் தரம் ஒன்று பதவி உயர்வு தொடர்பான மேன்முறையீட்டுக் கடிதம் ஒன்று செயலாளர் ஏ.ஐ விக்கிரமவினால் தனிச் சிங்களத்தில் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.



நிரந்தர நியமனம்வழங்கக் கோரி முல்லை வலய தொண்டராசிரியர்கள் கடந்த புதனன்று வலயக் கல்வி பணிமனை முன்பாக ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காண்க.

## மீள் குடியமர்வுக் கொடுப்பனவை விரைவில் பெற்றுத்தர அரச அதிபரிடம் கோரிக்கை

(வடமராட்சி கிழக்கு )

வடமராட்சி கிழக்கில் மீள் குடியமர்ந்துள்ள மக்களுக்கான கொடுப்பனவுகளை விரைவில் பெற்றுத்தருமாறு யாழ். அரச அதிபர் செ.பத்மநாதனிடம் வடமராட்சி கிழக்கு புனரமைப்புக் குழுவினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்கில் 3361 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளனர். எனிலும் அவர்களுக்கான மீளக் குடியமர்ந்ததற்கான 25,000 ரூபா கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லை.

இதனை சுட்டிக் காட்டியுள்ள புனரமைப்புக் குழுவினர் மிகவும் துன்பப்படும் இம்மக்களுக்கு விரைவில் இக்கொடுப்பனவை பெற்றுத் தருமாறு கேட்டுக் கொண்டுள்ளனர். (11)

## மிதிவெடிகள் அகற்றப்படும்வரை மன்னார் - புத்தளம் வீதி திறக்க முடியாது

### சிறி. இராணுவ அதிகாரி

பாதை ஓரங்களில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள் அகற்றப்படும்வரை மன்னார் புத்தளம் வீதியை திறக்க முடியாதுள்ளதாக சிறிலங்கா இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

கண்ணிவெடிகளை அகற்றுவது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் கவனத்திற்கு இதனைக் கொண்டு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வன்னி புனர்வாழ்வு அமைச்சர் நூர்தின் மசூர் இவ் வீதியை மீண்டும் போக்குவரத்திற்காக திறப்பது குறித்து சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் கடந்த வியாழனன்று பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தார். வன்னிப் புனர்வாழ்வு அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்ற இந்த பேச்சுவார்த் தையில் இராணுவ செயலாற்றுப் பணிப்பாளர் நிமல் ஜெயசூரியவும் சிரேஸ்ட உதவிச் செயலாளரும் கலந்து கொண்டனர் மன்னார் - புத்தளம் வீதி 132 கிலோமீற்றர் நீளமானது. இது கடந்த 12 வருடங்களாக சிறிலங்காப் படையினரால் பொது மக்களின் பாவனைக்கு மூடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

## திருமுறிகண்டியில் தியான மண்டபம்

திருமுறிகண்டிப் பிள்ளையார் ஆலய வளவில் தியான மண்டபம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் கணேசானந்த மகாதேவ சுவாமிகள் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதற்கான அடிக்கல்லினை பிள்ளையார் ஆலய இணைப்பாளர் சு.சபா நாட்டிவைத்தார்.

## விசேட கலந்துரையாடல்

மிக முக்கிய விடயங்கள் தொடர்பாகப் பரிசீலித்து தீர்மானம் எடுக்க வேண்டியிருப்பதால் சகல வலயங்களையும் சார்ந்த தொண்டர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளையும் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு முன்னதாக கிளிநொச்சிக் கல்வி வலயத்தில் ஒன்று கூடுமாறு வட மாகாணத் தொண்டர் ஆசிரியர்களின் ஒன்றியம் கேட்டுள்ளது.

## சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை வ.ஏ.டி.வில் நடத்திய மாபெரும் விழா!

(வவுனியா)

வவுனியா மாவட்ட சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையும், கல்வித் திணைக்களமும் இணைந்து நடாத்தும் மாபெரும் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் விழா நேற்று முன்தினம் வவுனியாவில் நடைபெற்றுள்ளது.

ஆரம்ப நிகழ்வாக வவுனியா மாவட்ட சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையணியினரின் அணி வகுப்பு வவுனியா மணிக்கூட்டுச் சந்தியில் ஆரம்பமாகி வவுனியா நகரசபை மைதானத்தைச் வந்தடைந்தது. அங்கு சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் வவுனியா மாவட்ட ஆணையாளர் அருந்தவராஜன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

வவுனியா சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் தேசிய அணிகளுக்கும், பாடசாலை அணிகளுக்குமிடையே முதலுதவிச் செய்முறைப் போட்டி, தமிழ்க் கட்டளைச் சொற்களுடனான வேக அணி நடைப்போட்டி, பாண்ட் வாத்திய இசைப் போட்டி, மனித சிகரங்கள் அமைத்தல் போட்டி என்பவற்றுடன் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

இப்போட்டியின் நடுவர்களாக விடுதலைப் புலிகளின் போராளிகளும், சிறிலங்கா இராணுவத்தினரும், சிறிலங்கா பொலிசாரும் மாத்திரமே கடமையாற்றியமை அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன், பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், ராஜா புவனேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (10)



**சிந்தனைக்கு**

சுதந்திரம் என்பது பேரம்பேசிப் பெற்றுக் கொள்ளும் ஒரு வியாபாரப் பண்டமல்ல. அது இரத்தம் சிந்தி வெற்றிகொள்ளும் ஒரு புனிதமான உரிமை.

- தமிழீழத் தேசியத் தலைவர்.


ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 09-03-2003


# 'வரவேற்கத்தக்கது'

தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுக்க விடுதலைப் புலிகளுடன் ஒரே அணியில் நின்று ஒற்றுமையாகப் படுபட தமிழ் கூட்டமைப்பினர் மேற்கொண்டுள்ள உறுதிப்பாடானது வரவேற்கத்தக்கதாகும். ஏனெனில், இதுவே தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுக்கவும், தமிழ் மக்களின் பாதுகாப்பான வாழ்க்கையை உறுதி செய்வதற்கும் தேவையானதொன்றாகும்.

விடுதலைப் புலிகள் இயக்கம் இன்று தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்ற ரீதியில், சிறிலங்கா ஆட்சியாளர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றது. விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பான விடயத்தில் எத்தகைய விட்டுக்கொடுப்பிற்கோ அன்றி பேரம்பேச்சிற்கோ உட்படமாட்டாது என்பது ஏற்கனவே தெளிவுபடுத்தப்பட்டதும் நிரூபிக்கப்பட்டதுமாகும்.

அதேவேளை, தமிழ் மக்களின் உரிமைக்காகவும் பாதுகாப்பான வாழ்விற்காகவும் விடுதலைப் புலிகள் இயக்கம் எத்தகைய தியாகங்களையும், அர்ப்பணிப்புக்களையும் செய்யத் தயாராக இருப்பது மட்டுமல்ல– எத்தகைய சவால்களையும் அது எதிர்கொள்ளத் தயாராகவே உள்ளது. இதனை அதன் கடந்த கால வரலாறே நிரூபணம் செய்வதாகவுள்ளது.

இதன் காரணமாகவே, இனப்பிரச்சினைக்குத் தீர்வென்பது விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்புடன் மட்டுமே சாத்தியமானதொன்று என்பதும், 'இனப்பிரச்சினைக்குத் தீர்வாக தமிழ் மக்களின் அபிலாசைகள் கருத்திற்கொள்ளப்பட வேண்டும் என்பதும் சிறிலங்கா ஆட்சியாளர்களினால் தமது விருப்பு வெறுப்பிற்கு அப்பாற்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டவையாகியுள்ளன. இதனை சர்வதேச நாடுகளும் ஏற்றுக் கொண்டுள்ளன.

இதன் காரணமாக சிறிலங்கா ஆட்சியாளர்கள் யுத்தத்தை நிறுத்தவும்– புலிகளுடன் பேச்சுக்களை நடத்தவும் முன்வந்துள்ளனர். மேலும், சர்வதேச மத்தியஸ்தத்திற்கும் உடன்பட்டுள்ளனர். சர்வதேச நாடுகளும் இனப்பிரச்சினைக்கான அரசியற் தீர்வே இலங்கையின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதாக அமையும் என்பதை உறுதி செய்து, இலங்கைக்கு உதவி வழங்குவதை இனப்பிரச்சினைக்கான சமாதானப் பேச்சுவார்த்தையில் காணப்படும் முன்னேற்றத்துடன் இனங்காண முற்பட்டுள்ளனர்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் – தமிழ் மக்களின் தரப்பில் உள்ள சிறிய முரண்பாடுகள், சந்தேகங்கள் என்பன நீக்கப்பட்டு தமிழர் தரப்பு ஓரணியில் திரண்டு நிற்றல் என்பது அவசியமானதே. இது தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கு மிக மிக அவசியமிக்கதொன்றாகும்.

இந்த வகையில், தற்பொழுது விடுதலைப் புலிகளுடன் ஒரே அணியில் செயற்படுவதென்ற தீர்மானத்துடன் தமிழ்க் கூட்டமைப்பினர் செயற்பட முன்வந்திருப்பதானது, தமிழ் மக்களின் கோரிக்கைகளையும், விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டையும் வலுப்படுத்தக் கூடியதாகும். அது மட்டுமல்ல, இது தமிழ் மக்களுக்காக அவர்கள் ஆற்றும் தமது பொறுப்புமிக்க கடமையுமாகும்.

தமிழ்க் கூட்டமைப்பினைப் பொறுத்து அவர்கள் இன்று தமிழர் தரப்பை பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். விடுதலைப் புலிகள் அமைப்பு தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடும் சக்தியாகவும், விடுதலைப் புலிகளின் தலைமை தமிழ் மக்களின் தேசிய தலைமைத்துவத்திற்குரியதாகவும் விளங்குகின்றது. இந்நிலையில், இவ்விரு தரப்பும் ஒருமைப்பாட்டுடன் செயற்படுவதானது தமிழ் மக்களின் உரிமைகளைவென்றெடுக்க உதவுவதாக இருக்கும்.

கடந்த காலத்தில் தமிழ்த் தலைமைகள் ஓரணியில் செயற்படாமையும், தமது சொந்த விருப்பு வெறுப்புக்களைப் பிரதிபலித்து தமிழ் மக்களின் நலன்களில் அக்கறை செலுத்தாது போனதுமே, இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் பெரும் நெருக்கடிகளைச் சந்திக்கவும், பெருமளவு இரத்தம் சிந்தவும் காரணமாகின. ஆனால், தற்பொழுது தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடும் சக்தியுடன்தமிழ்க் கட்சியின் கூட்டமைப்பும் இணைந்து செயற்பட முன்வந்துள்ளமையானது, தமிழர்களின் உரிமைகளை எவரும் பேரம் பேசுதலுக்கு உள்ளாக்குதல் முடியாது என்ற நிலையை உறுதியாகத் தோற்றுவிக்கும் என்பதில் சந்தேகம் கொள்ள எதுவுமில்லை.

# போ.ஐ.மு- ஜே.வி.பி.யிடையிலான ஒப்பந்தம் அரசின் தேசத்துரோக செயலைத் தடுக்கும்

## -அநுரா பண்டாரநாயக்க கூறுகிறார்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஜே.வி.பி.யும் இம்மாத இறுதியில் தமக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளும் என்று பொதுசன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் அநுராபண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் தற்போதைய அரசின் தேசத் துரோகச் செயலைத் தடுத்து நிறுத்தும் நோக்குடன் மேற்கொள்ளப்படுகிறது.

ஜே.வி.பி.யுடன் இணைந்து செயற்படுவதாக நடைபெற்ற பேச்சுக்களில் தொண்ணூறு சதவீத இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.

விரைவில் இரு கட்சிகளும் தமது இணைந்த செயற்திட்டங்களை வெளியிடும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சனாதிபதி மீதான மேலதிக விசாரணைக்கு சட்டமா அதிபரிடம் ஆலோசனை

சனாதிபதி உபயோகித்ததாகக் கூறப்படும் நாலரை இலட்சம் ரூபா பெறுமதியான வீடியோக் கமரா பொருத்தப்பட்ட கைப்பை தொடர்பான மேலதிக விசாரணையை மேற்கொள்ள சி.ஐ.டி. யினர் சட்டமா அதிபரின் ஆலோசனையை நாடியுள்ளனர்.

அமைச்சரவைக்கு இந்தக் கைப்பையுடன் சனாதிபதி வருகை தந்தாரென பெரும் சர்ச்சை ஒன்று உருவாகியிருந்தமை தெரிந்த விடயமே.

இதுதொடர்பாக உள்நாட்டு உளவுப் பிரிவின் பணிப்பாளர் நெவில் ஜோசப் விஜேதுங்க சி.ஐ.டி யினருக்குக் கொடுத்துள்ள முறைப்பாட்டிற்கிணங்க தற்போது விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

# மனச்சாட்சியின்படி வாக்களிக்க பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சுதந்திரம்

## - ஏற்பாடு செய்யப் போவதாக ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற விவாதங்களில் மக்களின் பிரதிநிதிகள் தங்கள் மனச்சாட்சியின்படி வாக்களிக்கும் ஏற்பாடுகளை அரசு செய்ய விருப்பதாக சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சமகால சமூகப் பிரச்சினைகள் குறித்து சுதந்திரமாக விவாதம் நடத்த வழிவகுப்பதன் மூலம் நாடாளுமன்ற சனநாயகம் மேலும் வலுவடைவதுடன் மக்களின் உரிமைகள் பலப்படுத்தப்படும். இதுபோன்ற பல யோசனைகளை அனைத்துக் கட்சிகளின் கவனத்திற்கும் கொண்டு வரவுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கைக் கடல்எல்லைக்குள் பிரவேசிக்கும் இந்தியப் படகுகளை பறிமுதல் செய்யப் பணிப்பு

(கொழும்பு)

இலங்கை கடல் எல்லைக்குள் வரும் இந்திய மீன் பிடிப்படகுகள் அனைத்தையும் பறிமுதல் செய்யும்படி இலங்கை கடற்படைக்கு அரசு உத்தரவிட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சகத்தின் புதிய விதிமுறைகளின்படி இலங்கை கடற்பகுதிக்குள் அத்துமீறி வரும் இந்திய மீன்பிடிப் படகுகளின் ஓட்டிகள், படகுகளுடன் கைது செய்யப்பட்டு சட்டபூர்வ நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர். அந்தப் படகுகளில் கடலில் தொழிலாளர்களாக வருபவர்கள் இந்திய கடலோர காவல் படையினரிடம் விரைவிலேயே ஒப்படைக்கப்படுவார்கள் என்றும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்திய- இலங்கை மீனவர்களிடையே நீண்ட காலமாகத் தொடர்ந்து வரும் பிரச்சினைக்கு தீர்வுகாண உதவும்படி இந்திய அரசுகேட்டுக் கொண்டுள்ளமைக்கு அமைவாக இந்த நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

## போராட்டத்தில் இணைவு

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் எதிர் வரும் 11ஆம் திகதி வடக்கு-கிழக்கில் நடக்கவிருக்கும் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கமும், சிறிலங்கா முஸ்லிம் ஆசிரியர் காங்கிரசும், கல்முனை மாவட்ட அதிபர் சங்கமும் ஆதரவு தெரிவித்துள்ளன.

தொண்டர் ஆசிரியர் நியமனங்கள் உட்பட 10 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

## எதிர்பார்ப்புக்களை...

மீதான எதிர்ப்பு ஓரளவு குறைவாகவே காணப்பட்டது. இருப்பினும், பாகிஸ்தான் அணியில் இருந்த அனுபவம் மிக்க ஆட்டக்காரர்களும், உலகின் தலைசிறந்த பந்து வீச்சாளர்களும் அவ் அணியை சுப்பர் சிக்ஸிற்குள் நுழைய சந்தர்ப்பத்தை உருவாக்குவார்கள் என்ற நம்பிக்கை காணப்பட்டது உண்மையே.

இங்கிலாந்தைப் பொறுத்து, அதிலுள்ள இளம் துடிப்பான சகலதுறை ஆட்டக்காரர்களும், அதன் தலைவரின் திடநம்பிக்கையும் அவ்வணியை பாகிஸ்தான் இல்லாது விடில் சுப்பர் சிக்ஸிற்குள் கொண்டு வந்துவிடும் என்றே எதிர்பார்ப்பு நிலவியது. ஆனால், இவ்விரு அணிகளும் பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்ட போட்டிகளில் இந்தியாவிடம் தோல்வி கண்டமை காரணமாகத் தமது நிலைகளை மேம்படுத்த முடியாது போய்விட்டது.

அதேபோன்றுதான் உலகக் கிண்ணப் போட்டிகளிலும் அவர்களுடைய ஆட்டம் அமைந்தது எனில் அது மிகையாகாது.

இருந்தபோதிலும், பாகிஸ்தான், இந்தியா அணிகளுக்கிடையிலான போட்டி பெரும் பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்டபோதிலும், இன்றைய கிரிக்கெட் உலகின் நாயகன் சச்சின் டெண்டுல்கரின் தனிப்பட்ட ஆட்டத் திறமையால் பாகிஸ்தான் அணி நெருக்கடிக்கு உள்ளானது. அத்துடன், உலகக் கிண்ணப் போட்டிகளில் பாகிஸ்தான் அணி முதற் சுற்றோடு வெளியேறுகின்றமை இது முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், மேற்படி அணிகள் முதற் சுற்றோடு வெளியேறியமைக்கு போட்டிவிதிகளும், இயற்கையின் அனர்த்தங்களும் ஒரு காரணமாக அமைந்தது என்றால் அது மிகையாகாது.

இயற்கையின் அனர்த்தம் ஒருபுறம் இருக்க, போட்டி விதிமுறையானது இவ் அணிகளால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது என்றே கூறப்படுகின்றது. அதாவது, பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி சில நாடுகள் கென்யா மற்றும் சிம்பாப்வே ஆகிய நாடுகளுக்கு விளையாடச் செல்ல மறுத்துவிட்டமையால் இரு நாட்டு அணிகளுக்கும் போட்டி விதிப்படி விளையாடாமலேயே நான்கு புள்ளிகள் வழங்கப்பட்டன. இது முற்றிலும் தவறு என்றே பெரும்பாலான கிரிக்கெட் விமர்சகர்களால் கூறப்படுகின்றது.

இதில் தவறு எதுவெனில், போட்டிகளை நடத்துகின்றபோது அதில் போட்டியிட்டு வெற்றி பெறுகின்றவர்களையே முதல் நிலையானவர்கள் எனக் கருதுகின்றோம்.

இந்த நிலையில், விளையாடாமல் போட்டி விதிமுறைக்கு அமையப் புள்ளிகள் வழங்கப் படுகின்றமை அடுத்து வரும் பலமான சுற்றுகளுக்குள் பலவீனமான அணிகளை உள்நுழையச் செய்வதோடு, ரசிகர்களுக்குப் பரபரப்பை ஏற்படுத்தவோ அன்றி விறுவிறுப்பை ஏற்படுத்தவோ முடியாமல் போய்விடும் என்பது உண்மை.







வதிவிட வேளாண்மையில், வெற்றியீட்டியோரையும், பரிசில்கள் வழங்கப்படுவதையும் மேலுள்ள படங்களில் காணலாம்.

# வதிவிட வேளாண்மையில் வெற்றியீட்டிய விவசாயிகளுக்குப் பரிசில்கள் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் 2001-2002ஆம் ஆண்டுக்கான வதிவிட வேளாண்மை மற்றும் சிறந்த நெற்செய்கைத் தெரிவுப் போட்டிகளில் வெற்றியீட்டிய விவசாயிகளுக்கான பரிசில்கள் நேற்று கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் மதன்ராஜ் தலைமையில் நேற்றுப் பகல் 10.30 மணிக்கு நிகழ்வு ஆரம்பமாகியது.

தமிழீழ தேசியக் கொடியினை கிளி. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முரளி ஏற்றி வைத்தார்.

கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம், கிளிநொச்சி மாவட்ட நீர்பாசன பொறியியலாளர் கந்தசாமி, கமநலசேவை ஆணையாளர் இராஜலிங்கம், மாவட்ட விவசாய திணைக்கள போதனாசிரியர் செல்வி கந்தசாமி மற்றும் துறைசார் அதிகாரிகள் கலந்து கருத்துரைகள் வழங்கியதுடன் வெற்றி பெற்ற 34 விவசாயிகளுக்கான பரிசில்களையும், சான்றிதழ்களையும் வழங்கி கௌரவித்தனர்.

கிளி.மாவட்ட தென்னை அபிவிருத்திச்சபை உத்தியோகத்தர் தனிநாயகம் கலந்து கொண்டு விவசாயிகளை பாராட்டியதுடன் வெற்றியீட்டிய விவசாயிகளுக்கு மூன்று வருடத்தில் பயன்தரவுள்ள தென்னம்பிள்ளைகளை இலவசமாக ஒருவருக்கு தலா இரண்டு தென்னம்பிள்ளைகள் வீதம் வழங்கிக் கௌரவித்தார். (சோ)

## -உலகக்கிண்ணப் போட்டி- சிம்பாவ்வேயை நியூசிலாந்து ஆறு விக்கெட்டுக்களால் வென்றது




உலகக் கிண்ணத்திற்கான சிம்பாவ்வேக்கும் நியூசிலாந்திற்கு மிடையிலான சுப்பர் சிக்ஸ் போட்டியில் நியூலாந்து அணி ஆறு விக்கெட்டுக்களால் வெற்றி யீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவ்வே அணி ஏழு விக்கெற் இழப்பிற்கு 252 ஓட்டங்களைப் பெற்றது. ஸ்றிக் ஆட்டமிழக்காமல் 72 ஓட்டங்களையும், தைபு 53 ஓட்டங்களையும் பெற்றனர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 47.2 ஓவர்களில் 4 விக்கட்டுக்களை இழந்து 253 ஓட்டங்களைப் பெற்றது.

அஸ்ரல் ஆட்டமிழக்காமல் 102 ஓட்டங்களையும், கைன்ஸ் 54 ஓட்டங்களையும் பெற்றனர்.

## அனைத்துலக...

யாழ். மாவட்ட பெண்களின் பிரச்சினைகள் மற்றும் தேவைகளை கண்டறிவதற்காக இந்த ஒன்றுகூடல் நடத்தப்பட்டது.

யாழ்.குடாநாட்டில் இந்து மகளிர் கல்லூரியில் சர்வதேச மகளிர்தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வுகளுக்கு தென்னிலங்கையை சேர்ந்த பெண்கள் அமைப்புக்களில் இருந்து இருநூற்றைம்பதிற்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர்.

வவுனியா மாவட்டத்தில் ரம்பைக்குளம் சந்தியில் ஆரம்பமான ஊர்வலம் நகரசபை மண்டபத்தை அடைந்து அங்கு பொதுக் கூட்டம் இடம்பெற்றது.

சர்வதேச பெண்கள் நாள் நிகழ்வுகள் புதுக்குடியிருப்பு பிரதேச சந்தியிலும் எழுச்சியுடன் நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயத்தில் நேற்று காலை 9.00 மணிக்கு ஆரம்பமான ஏழுச்சிப் பேரணி புதுக்குடியிருப்பு மகாவித்தி யாலயத்தில் முடிவடைந்தது.

பெண்கள் அமைப்பின் பல பிரிவுகளைச் சேர்ந்த பெண்கள், பாடசாலை மாணவிகள் என பெருமளவானோர் கலந்து கொண்ட இந்நிகழ்விற்குப் பிரதேச பெண்கள் எழுச்சிநாள் குழுத் தலைவி திருமதி குணசிங்கம் தலைமை தாங்கினார்.

சிறப்புரையினை அரசியல் துறையைச் சேர்ந்த தமிழ்கவி நிகழ்த்தினார். மேலும் வன்னியின் பல பாகங்களிலும் கருத்தரங்குகள், கூட்டங்களும் நடைபெற்றன. (10)

## உப்பில் உறைந்த...

கினார். தளபதி கோதை ஒளி நாடாவை வெளியிட்டு வைக்க இதன் முதற்பிரதியை வவுனியா மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் பெற்றுக்கொண்டார்.

கிளிநொச்சியில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் மாலை 5. 30 மணியளவில் ஆரம்பமான இந்நிகழ்வில் சிறப்புரையினை செஞ்சோலைப் பொறுப்பாளர் சுடர்மகளும், வெளியீட்டுரையினை மகளிர் பிரிவைச் சேர்ந்த தமிழ்விழியும் நிகழ்த்தினர்.

தொடர்ந்து கலைஞர்களை கடற்புலிகளின் மகளிர் பிரிவு சிறப்புத் தளபதி விடுதலை, நிதர்சனப் பொறுப்பாளர் சேரலாதன், சிறுத்தைப் படையணியின் மகளிர் சிறப்புத் தளபதி ஆரதி ஆகியோர் கௌரவித்தனர்.

தொடர்ந்தும் மதிப்பீட்டுரையினை ஆதிலட்சுமி சிவகுமார் நிகழ்த்தினார். ஒளி நாடாவினை சிறப்புத் தளபதி விடுதலை வெளியிட்டு வைக்க, ஆசிரியர் முருகேசு முதல்ப் பிரதியினைப் பெற்றுக்கொண்டார். (10)

## சமாதான முயற்...

வருகின்றது. இவ்வாறு விடுதலைப் புலிகளின் உயர்மட்டக் குழு விரைவில் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று அங்குள்ள நடைமுறைகள் குறித்து ஆராயவுள்ளதாகவும், தென்னாபிரிக்காவிற்கும் செல்லும் விடுதலைப் புலிகள் குழுவினர் அந்நாட்டின் முன்னைய நிலைமைகள் குறித்தும்,தற்போதைய சமாதான நிலைமைகள் குறித்தும் நேரடியாக ஆராயவுள்ளனர் என்று தெரிவித்துள்ள அவர், உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கும் போது,

உயர் பாதுகாப்பு வலயங்களை விட்டு வெளியேறியுள்ளவர்களின் மீள்குடியேற்றத்தை சனவரியில் ஆரம்பிப்பதென ஏற்கனவே காணப்பட்ட இணக்கப்பாடு இராணுவம் ஒரு கால அட்டவணையைத் தயாரித்து உயர்பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியேயுள்ள வீடுகள் மற்றும் பொதுக்கட்டடங்களிலிருந்து படையினரை வெளியேற்றுவதற்கு சிறிலங்கா அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இதன்பின்னர் உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை தொடர்பாகவும் இணக்கம் காணப்பட்டது. படிப்படியாகவே இப்பிரச்சினைகள் அணுகப்படுமென நான் நினைக்கின்றேன். ஆனாலும், உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை குறித்து எப்போது இனிப் பேசுவார்கள் என எனக்குத் தெரியாது. இது இரு தரப்பும் முடிவு செய்ய வேண்டிய விடயம்.

தற்போது இலங்கை அரசின் கோரிக்கையின் பிரகாரம் இந்திய முன்னாள் தளபதி சதீஸ் நம்பியாரின் அறிக்கையைப் பெற்று அதனை ஆராய்ந்ததன் பின்னர் இரு தரப்பினரும் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக பேச்சுக்களில் ஈடுபடலாம் எனவும் கூறியுள்ள அவர், சமாதானத்தின் அநுகூலங்களை சகல மக்களும் அனுபவிக்க வேண்டும். போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உடனடி கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. பாடசாலைகள் மீளக் கட்டப்பட வேண்டியுள்ளது. இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டு அவர்களது இயல்பு வாழ்க்கை மேம்படுத்தப்பட வேண்டும். தற்போது போர் நிறுத்த உடன்பாடு நடைமுறையிலுள்ளது. பொருளாதார மற்றும் மனிதாபிமான முன்னேற்றங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டும். இதற்காக இருதரப்பினரையும் உள்ளடக்கி அமைக்கப்பட்ட உப குழுக்கள் இது விடயத்தில் முக்கிய முடிவுகளை எடுப்பார்கள். இனப்பிரச்சினை தீர்வு குறித்து இறுதி முடிவெடுக்க நீண்ட காலம் எடுக்கும். உடனடியாக முடிவுகளை யாரும் எதிர்பார்க்க முடியாது. ஆனாலும், படிப்படியாக நம்பிக்கையும், புரிந்துணர்வும் வளர பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வழிகள் தோன்றும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## உண்ணாவிரத...

பார்வையிட்டபோதும் தீர்க்கமான முடிவு எதனையும் அறிவிக்காததால் இவர்கள் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

## வவு. மாவட்ட...

வைப்பதற்கான திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்துள்ளார். (10)

## வவுனியாவில்...

சிதம்பரம், பணிக்கர் புளியங்குளம், ஆகிய பகுதிகளில் கண்ணிவெடிகள், மிதிவெடிகள் முற்றாக அகற்றப்பட்டுள்ளதாக கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது.

இதனைத் தொடர்ந்து இவ்விடங்களில் மீள்குடியமர்வு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இன்று தொடக்கம் கட்டம் கட்டமாக மக்கள்இப்பகுதிகளில் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படுவர். இப்பகுதிகளில் மீள்குடியமர உள்ள மக்கள் தாண்டிக் குளம் சோதனைச் சாவடியைத் தாண்டி 24மணிநேரமும் பயணம் செய்ய முடியும். ஆனால் இரவு 7.00 மணிக்கு பின்பு சோதனைச்சாவடிச் தாண்டிச் செல்லும் போது சோதனை நிலையத்தில் பதிந்துவிட்டுச்செல்ல வேண்டும். (10)

## கேரதீவு - சங்குப்...

தரைவழிப் பாதையான கேரதீவு - சங்குப்பிட்டி வீதி 13 வருடங்களாகியும் மக்கள் போக்குவரத்துக்கு திறந்துவிடப்படாமல் இருப்பதை தங்களின் மேலான கவனத்திற்கு தயவுடன் கொண்டு வருகின்றோம்.

1937ஆம் ஆண்டு அப்போதைய போக்குவரத்து இலாகாப் பணிப்பாளராகவும், பொறியியலாளராகவும் இருந்த மகாதேவா இத்தாம்போதி வேலைகளில் மிகவும் சிரத்தை கொண்டு செயலாற்றினார். அவரின் நினைவாக இது மகாதேவா தாம் போதி என அழைக்கப்படலாயிற்று. 1937இல் 13700 அடியாக இருந்த கடல் இடைவெளி 1955ஆம் ஆண்டளவில் 3300 அடியாக குறைக்கப்பட்டது. பாராளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கும்போது பொது வேலை இலாகா மதிப்பீட்டில் மகாதேவா தாம் போதிக்கென ரூபா 10/- அடையாள மானியமாக ஒதுக்குவது வழமையாக இருந்து வந்தது. காலத்துக்குக் காலம் கடல் இடைவெளி குறைக்கப்பட்டு, தற்போது 1300அடி நீள கடல் இடைவெளியே இருக்கின்றது. இதில் 630 அடி நீளமான பாலம் கேரதீவு துறையை அண்டி அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1981இல் இருந்து வடபகுதி பாராளுமன்ற உறுப்பினர்கள் மேற்படி வேலைத்திட்டத்திற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் 100 இலட்சம் ரூபாவை ஒதுக்கி உதவினார்கள். பிரதேச அபிவிருத்தி அமைச்சு 15 இலட்சம் ரூபாவை ஒதுக்கி உதவியது. கேரதீவுப் பக்கம் ஆழம் 11 அடி, சங்குப்பிட்டி பக்கம் ஆழம் 4' - 6' ஆகும்.

1981ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9ஆம் திகதி தாம்போதி வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டபோது பெருமளவு பொது மக்களும், பொது ஸ்தாபனங்களும் ஆர்வமுடன் சிரமதான அடிப்படையில் வேலை செய்தமை குறிப்பிடத்தக்கது.

மேற்குறித்த கேரதீவு - சங்குப்பிட்டி பாதை கிளிநொச்சி, மன்னார், யாழ். மாவட்ட மக்களுக்கு மிக அத்தியாவசியமான குறுந்தூர போக்குவரத்துப் பாதையாகும். இப்பாதை வழியாக தினமும் 2000 (இருவழி) பிரயாணிகள் பயணித்து வந்துள்ளனர்.

விரைவான போக்குவரத்து ஐ. நா. சாசனப்படி அடிப்படை மனித உரிமைகளுள் ஒன்றாகும். மனிதாபிமான பிரச்சினையில் முக்கியத்துவம் வாய்ந்த இப்பாதையை மீளத் திறக்கும் விடயத்தை அரசின் உடனடிக் கவனத்திற்கு கொண்டுவந்து அடுத்து வரும் தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன் இப்பாதையை திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி இம் மகஜரை பணிவன்புடன் சமர்ப்பிக்கின்றோம்.

கேரதீவு - சங்குப்பிட்டி பயணத் தூரம்.

1) யாழ்ப்பாணம் - பூநகரி 21மைல், 2) யாழ்ப்பாணம்-மன்னார் 70மைல், 3) யாழ்ப்பாணம்-வவுனிக்குளம் 52 மைல், 4) யாழ்ப்பாணம்- வன்னேரி 33 மைல், 5) யாழ்ப்பாணம்-அக்கராயன்குளம் 40 மைல், 6) யாழ்ப்பாணம்-முருகண்டிக்குளம் 47 மைல்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.